கட்டுவதற்கு உரிய ஏற்பாடு செய்து தருவதாகக் கூறினார்கள். அந்த இடத்தில் போதிய இடம் உள்ளது. ஆகவே, அங்கு சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

160—

மீன்பிடித் துறைமுகம்

***5247—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் தற்போது மீன்பிடித் துறைமுகம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *தமிழகத்திற்கு காவேரித் தண்ணீரை தந்திட்ட உரிமைக் குரல், ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைத்திட்ட ஒரே விரல் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வேம்பார் ஊராட்சி, வேம்பார் வடக்கு, வேம்பார் தெற்கு, பெரியசாமிபுரம் ஊராட்சி, வேப்பலோடை ஊராட்சி, கிழக்குக்

2013 ஏப்ரல் 5]

கடற்கரை சாலையில் அமைந்திருக்கக்கூடிய ஊராட்சிகள் என்று பதினைந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர். அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைவதற்கு, எல்லாரையும் காக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை காப்பார்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து என்னுடைய கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் வடகோடியிலுள்ள வேம்பார் மீனவர் கிராமத்தில் ஏறத்தாழ, எங்களுக்குக் கிடைத்த தகவல் என்பது 2,168 மீனவர்கள்தான். அந்த மீனவர் கிராமத்தில் 32 இழுவை விசைப் படகுகளும், 79 நாட்டுப் படகுகளும்தான் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றன. இந்த வேம்பார் பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய பெங்களூருவில் உள்ள Central Institute of Coastal Engineering for Fishery (CICEF) என்ற நிறுவனம் ஆய்வு மேற்கொண்டதில் அந்தப் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மீனவ மக்களுடைய வாழ்வாதாரமாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மீண்டும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

மருத்துவமனை உபகரணங்கள்

***13521—திரு. சு. ரவி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் பிரிவுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன் போன்ற பிரிவுகளை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இரண்டு மருத்துவ வகை மருந்தகமாகும். அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் இன்றைய நிலவரப்படி 10,256 காப்பீட்டாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 155 புறநோயாளிகள் மருத்துவச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். உள்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்